

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 13.08.2026


# தமிழ்த்தாயை ஏமாற்றுவதா?

**‘ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, இறுதியாக மனிதனையே கடிக்கலாமா?’** - என்று ஒரு பழமொழி உண்டு. அதைப் போல விவசாயிகளை ஏமாற்றினார்கள். அடுத்து மக்களையே ஏமாற்றினார்கள். இப்போது தமிழ்த்தாயையே ஏமாற்றுகிறார்கள். உண்மையில் முதலமைச்சர் விஜய்யின் துணிச்சலை பாராட்டத்தான் வேண்டும். கூச்சமே இல்லாமல் பொய்களையும் அநியாயங்களையும் செய்வது முதலமைச்சர் விஜய்யின் பாணியாக இருக்கிறது.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் குறித்த அரசினர் தனித் தீர்மானத்தை முதலமைச்சர் விஜய் சட்டசபையில் கொண்டு வந்துள்ளார். **“தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், அலுவலகங்கள், பொதுத்துறை அரசு நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் நிகழ்வு தொடங்குவதற்கு முன் தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் முதலில் பாடப்பட வேண்டும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஏகமனதாகத் தீர்மானிக்கிறது”** என்பதுதான் அந்தத் தனித்தீர்மானம் ஆகும். இதனை திராவிட முன்னேற்றக் கழகம் உள்பட அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த உணர்வோடு ஆதரித்துள்ளார்கள்.

இப்படி ஒரு தனித்தீர்மானம் கொண்டு வர என்ன காரணம்? முதலமைச்சர் விஜய்க்கு இருக்கும் குற்றவுணர்ச்சிதான் முதல் காரணம் ஆகும்.

அவர் முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்ட விழாவின் தொடக்கத்தில் வந்தே மாதரம் பாடப்பட்டது. அதன் பிறகு தேசிய கீதம் பாடப்பட்டது. மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. தமிழை மூன்றாவது இடத்துக்கு தள்ளி வைத்து தனது பதவியேற்பு விழாவை நடத்தினார் விஜய். ஆளுநரின் அஜெண்டாவுக்கு விஜய் தலையாட்டினார்.

அதே போலத் தான் தனது உரைக்கு முன்னதாக தேசியகீதம் பாடப்பட வேண்டும் என்ற ஆளுநர் மாளிகையின் கோரிக்கைக்கும் அடிபணிந்து விட்டார்கள். சபையில் ஆளுநர் உரையாற்றும் முன் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

**இப்படி ஒட்டுமொத்தமாக ஆளுநர் ஆசைக்கு இணங்கி விட்டு, இப்போது தமிழ்த்தாயைக் காப்பாற்றுவது போல நடிக்கிறது த.வெ.க. அரசு.**

**தமிழ்த்தாய் வாழ்த்தை ஓங்கி ஒலிக்க வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 56 ஆண்டுகளுக்கு முன்பே இதனைச் செய்து விட்டார். 11.3.1970 ஆம் நாள் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகள், பொது நிறுவனங்கள், நிகழ்ச்சிகளில் முதலில் பாட வேண்டும் என்று அரசாணை வெளியிட்டார்கள். அதனால் தான் தமிழ்த்தாய் வாழ்த்து இன்று வரை ஒலித்து வருகிறது.**

12.12.2021 ஆம் நாள் முதலமைச்சராக இருந்த திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் கட்டாயம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்பட வேண்டும் என்று அரசாணை வெளியிட்டார்கள். தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவதை நெறிப்படுத்தினார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அரசாணை (நிலை) எண். 1037. பொதுத் (பொது 1) துறை, நாள். 17.12.2021.

**மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்பட்டது. இப்பாடல் 55 வினாடிகளில் முல்லைப் பாணியில் (மோகன ராகம்) மூன்றன் நடையில் (திசுரம்) பாடப்படவேண்டும். தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள். பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும், நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும்.**

**தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும்போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோருக்கு எழுந்து நிற்பதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. பொது நிகழ்வுகளில் ‘தமிழ்த்தாய் வாழ்த்து’ இசைவட்டுகளைக் கொண்டு இசைக்கப்படுவதைத் தவிர்த்து பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாகப் பாடப்பட வேண்டும். அன்னைத் தமிழின் பெருமையை உலகறியச் செய்வதிலும், இளம் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதிலும், தனியார் அமைப்புகளும் பொது மக்களும் பெரும்பங்காற்ற முடியும் என்பதால், தமிழ்நாட்டில் தனியார் அமைப்புகள் நடத்திடும் கலை, இலக்கியம். பொதுநிகழ்வுகள் ஆகியவற்றின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவது ஊக்குவிக்கப்படும் என்று அரசாணை வெளியிட்டவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

எனவே அனைத்தும் அரசாணைகளாக இருக்கிறது. த.வெ.க. அரசுக்கு துணிச்சல் இருந்தால் இதனை சட்டம் ஆக்குங்கள். ஆளுநருக்கு அனுப்புங்கள். ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு அனுப்புங்கள். அதை விட்டுவிட்டு தனித்தீர்மானம் போடுவதால் என்ன பயன்?

நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் வந்தே மாதரம் பாடுங்கள் என்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தேசிய கீதம் பாடுங்கள் என்கிறார் ஆளுநர். பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் தங்களை மன்னர்களாக நினைத்துக் கொண்டு தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவதாக தள்ளி வைக்கும் அளவுக்கு துணிச்சலைப் பெற்றுவிட்டார்கள். இவற்றை எல்லாம் த.வெ.க. அரசின் தனித்தீர்மானத்தால் எதுவும் செய்ய முடியாது.

தனித்தீர்மானத்தின் போது உரையாற்றிய சபாநாயகர், **“யாருக்கும் அனுப்பி அனுமதி கேட்க வேண்டிய அவசியம் நமக்கு இல்லை”** என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியானால் இந்த தனித்தீர்மானம் எதற்காக நிறைவேற்றப்படுகிறது? அரசே வைத்துக் கொள்வதற்கு எதற்காக தனித் தீர்மானம்?

**தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் குறித்து சர்ச்சை எழுப்புவது ஆளுநர் மாளிகை. அவர்களுக்கு இந்த தனித்தீர்மானம் அனுப்பி வைக்கப்பட வேண்டாமா? அவர்களை ஒப்புக் கொள்ள வைக்க வேண்டாமா?**

**தமிழ்த்தாயையுமா ஏமாற்ற வேண்டும்?**

●●

---

### திராவிடத்தின் திசைகாட்டும் போர் முரசு

# முரசொலியின் பணிகள் மென்மேலும் சிறக்கட்டும்!

## 85வது பிறந்த நாளையொட்டி – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, ஆக. 13 -**

**“திராவிடத்தின் திசைகாட்டும் போர் முரசு முரசொலியின் பணிகள் மென்மேலும் சிறக்கட்டும்” என்று முரசொலி 85ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

இதுகுறித்து கழக இளைஞர் அணிச் செயலாளர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்தப்பிள்ளை முரசொலிக்கு 85வது பிறந்த நாள் இன்று (10.08.2026).**

**கூர்மையான தலையங்கங்கள், ஆழமான அரசியல் கட்டுரைகள் என திராவிடத்தின் திசைகாட்டும் போர் முரசாக வெளிவந்து கொண்டிருக்கும் முரசொலியில், கழகத் தலைவர் @MKSTALIN அவர்கள் வழிகாட்டுதலின்படி,**

**@DMK_YOUTHWING சார்பாக @PAASARAI பக்கம் நடத்தி வருகிறோம் என்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.**

**இரண்டாம் உலகப்போர் காலத்தில் சிறு துண்டறிக்கையாக தொடங்கிய முரசொலியின் பயணம் இன்றைய நவீன உலகில் பல்வேறு பரிணாம வளர்ச்சியைப் பெற்று, நாள் தோறும் லட்சக்கணக்கானோரை சென்றடைந்து கொண்டிருக்கிறது.**

**கழகத்தின் மீதான அவதூறுகள், வசவுகள், விமர்சனங்கள் அனைத்தையும் அடித்து நொறுக்கும் முதல் கருத்தாயுதமாக இன்றும் முரசொலி திகழ்கிறது.**

**தமிழ், தமிழர், தமிழ்நாட்டு நலனுக்கான முரசொலியின் பணிகள் மென்மேலும் சிறக்கட்டும்!**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### நாடெங்கும் பெரும் எண்ணிக்கையில் துவக்கப் பள்ளிகள் மூடப்படுகின்றனவா?

# நிலைமையைச் சீர்செய்ய ஒன்றிய அரசு என்ன செய்துள்ளது?

## மக்களவையில் டி.ஆர்.பாலு கேள்வி!



புதுடெல்லி, ஆக. 13 -

மாணவர்கள் இடைநிற்றல் காரணமாக பெரும் எண்ணிக்கையில் நாடுமுழுவதும் துவக்க பள்ளிகள் மூடப்பட்டுள்ளனவா? சென்ற இரண்டு வருசங்களில் இப்படி மூடப்பட்ட பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை என்ன? இது தொடர்பாக மாநிலவாரியான விவரங்கள் என்ன? இந்த நிலைமையை சரிசெய்ய மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

என நாடு தழுவிய அளவில் ஆரம்பக் கல்வி நிலையங்கள் போதிய மாணவர்கள் இல்லாத காரணத்தினால் மூடப்பட்டு வரும் கவலைக்குரிய பிரச்சனை குறித்து திமுக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் ஒன்றிய கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இந்த கேள்விக்கு ஒன்றிய பள்ளிக்கல்வி இணை அமைச்சர் நேற்று, அதாவது 10.8.2026 அன்று மக்களவையில் எழுத்து பூர்வமாக விடை அளித்தார்.

அதில், அரசியலமைப்புச் சட்டத்தின்படி கல்வி பொதுப்பட்டியலில் இருப்பதால் பள்ளிக்கல்வி தொடர்பான அனைத்துப் பொறுப்புகளும் மாநில அரசுகளின் வசம் உள்ளது. எனவே, கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்டத் தகவல் அமைப்பு பிளஸ் என்ற தலைப்பில் நிறுவப்பட்டுள்ள தளத்தில் அனைத்து மாநிலங்களும் பள்ளிகள் மற்றும் மாணவர்கள்ன் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

### 9946 அரசு தொடக்கப் பள்ளிகள் மூடல்!

இவ்வாறு மாநிலங்களும் ஒன்றிய நிலப்பகுதி அரசுகளும் பதிவேற்றியுள்ள தகவல்கள், புள்ளி விவரங்களின்படி இந்தியாவில் கடந்த 2024-25 ஆம் ஆண்டில் எட்டுலட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஆறு (8,89,806) ஆக இருந்த அரசு ஆரம்பப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை, சென்ற 2025 - 26 ல் எட்டு லட்சத்து எழுபத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது (8,79,940) ஆக குறைந்து உள்ளது. அதாவது, நாடு முழுவதும் 9946 (ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தாறு) பள்ளிகள், (கிட்டத்தட்ட 10,000 பள்ளிகள்) இடைநிற்றல் காரணமாக சென்ற ஆண்டில் பல்வேறு மாநிலங்களில் மூடப்பட்டன.

இதில், ஆந்திராவில் 1446 பள்ளிகள், கருநாடகாவில் 615 பள்ளிகள், மத்திய பிரதேசத்தில் 1043 பள்ளிகள், மேகாலயாவில் 2174 பள்ளிகள், ராஜஸ்தானில் 473 பள்ளிகள், தெலங்கானாவில் 1861 பள்ளிகளும், மேற்கு வங்காளத்தில் 587 பள்ளிகளும் என அதிக எண்ணிக்கையில் ஆரம்ப அரசுப் பள்ளிகள் மூடப்பட்ட மாநிலங்கள் ஆகும்.

### இடைநிற்றல் பிரச்சினை!

பி.எம்.ஸ்ரீ திட்டத்தின் கீழ் முன்மாதிரி சிறப்புப் பள்ளிகள் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் வாயிலாக பள்ளிகளில் இடைநிற்றல் பிரச்சினையை எதிர்கொள்ள மத்திய அரசு தனது பல்வேறு திட்டங்கள் மூலம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பள்ளி மாணவர்களுக்கு உணவு வழங்குதல், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும் இடைநிற்றலைக் குறைக்கவும் புதிய பள்ளிகளைத் திறக்கவும், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உறைவிடப் பள்ளிகள் அமைக்கவும், பிரதமர் பழங்குடி நியாய மகா அபியான் பெருந்திட்டத்தின் (பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான்) கீழ் தங்கும் விடுதிகள் கட்டவும் மாநில அரசுகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இதன் விளைவாக 201819 ஆம் ஆண்டில், கிராமப்புறங்களில் 96.49 என்ற அளவில் இருந்த பள்ளிக் கல்வியை அணுகும் விகிதாச்சாரம் (Gross Access Ratio GAR) 2025 - 26 ல் 98.14 என மேம்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் இணை அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி தனது விரிவான பதிலில் தெரிவித்தார்.

---

### திராவிட மாடல் ஆட்சியில்

# 5.78 லட்சம் கரும்பு விவசாயிகளுக்கு ரூ.2031.47 கோடி வழங்கப்பட்டது!

## பேரவையில் வெளியான தகவலுக்கு மறுப்பு தெரிவித்து – முன்னாள் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!



சென்னை, ஆக. 13 -

தமிழ்நாடு முதலமைச்சர் (10.08.2026) சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் கரும்பு விவசாயிகளுக்கு தி.மு.க. அரசு எதுவும் செய்யாதது போன்ற தோற்றத்தினை உருவாக்கும் வகையில் சட்டமன்றத்தில் படிக்கப்பட்டு செய்திகுறிப்பாக வெளியிடப்பட்டுள்ளது உண்மைக்கு மாறான தகவல் என்று குறிப்பிட்டு முன்னாள் அமைச்சர் இரா. இராஜேந்திரன் அறிக்கை வெளிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவரது அறிக்கை வருமாறு:-

முன்னாள் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் கரும்பு விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளது.

இந்நிலையில் (10.08.2026ல்) சட்டப்பேரவையில் 110விதியின் கீழ் முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததை நாளிதழ்களில் த.வெ.க. அரசு வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது : -

கரும்பு விவசாயிகளுக்கு கடந்த 5 ஆண்டுகளில் கரும்பிற்கான சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.156 மட்டுமே உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதாகவும், மாநில அரசால் கரும்பு சிறப்பு ஊக்கத் தொகையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு ஓராண்டில் 134 ரூபாய்க்கு மேல் வழங்கப்படுவது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான செய்தியாகும்.

கரும்பு விவசாயிகளின் நலன்மீது மிகுந்த அக்கறை கொண்ட திராவிட மாடல் ஆட்சியில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.2750லிருந்து ரூ.750 உயர்த்தி டன் ஒன்றுக்கு ரூ.3500ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசால் கரும்புக்கு வழங்கப்படும் சிறப்பு ஊக்கத் தொகையாக 2020-2021 அரவைப்பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.192.50 எனவும், 2021-2022 அரவைப் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.195 எனவும், 2022-2023 அரவைப்பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.195 எனவும், 2023-2024 அரவைப் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.215 எனவும், 2024-2025 அரவைப்பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.349 எனவும் சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 5 ஆண்டுகளில் கரும்பிற்கான சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.156 மட்டுமே உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்பதும், சிறப்பு ஊக்கத்தொகையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு ஓராண்டில் 134 ரூபாய்க்கு மேல் வழங்கப்படுவது வரலாற்றில் இதுவே முதல்முறை என்பதும் முற்றிலும் தவறான செய்தி என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 முதல் 2026 வரையிலான கழக ஆட்சியில் 5,77,755 கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக அவர்களது வங்கி கணக்கில் ரூ.1094.27 கோடி வழங்கப்பட்டுள்ளது,

மேலும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு கரும்பு கிரையத் தொகையை உடனடியாக வழங்குவதற்காக ஆண்டுதோறும் வழி வகைக் கடனாக கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் ரூ.937.20 கோடி கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக கடந்த 5 ஆண்டுகளில் கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை மற்றும் கரும்பு கிரையத் தொகையை தாமதமின்றி வழங்குவதற்காக மட்டுமே ரூ.2031.47 கோடி கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டும் மற்றும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டும் கரும்பு விவசாயிகளின் நலன்காத்தவர் முன்னாள் முதல்வர் - கழகத் தலைவர் அவர்கள் ஆவார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை வெளிட்டுள்ளார்.